343

Erumbi Appah's Series No 2.

# ஸஹாநி.

R6
NM
173423

ஸ்ரீராமஜெயம்.

# ஷ்ா ஞானி

THE REGISTRAR OF ...
25 APR 1917

இதை ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழி
பேர்த்து அதினுடன் அநேக நீதி
வாக்கியங்களை சேர்த்து
சுலப தமிழ் நடையோடு
எழுதப்பட்டது.

—:0:—

இதை அனேக ஜனங்கள் விரும்பினபடியால்
வித்வான்களின் சகாயத்தால் அனேக
ஸம்ஸ்கிருத கிரந்தங்களைப்பார்த்து
ஸ்ரீ மத் பரமஹம்சேத்யாதி
கோயில் கந்தாடை
ஸ்ரீரங்காச்சாரியர்
ஷிஷ்யர் அப்பாரிய தேசிகர் ப்ரதம ஷிஷ்யரான
எரும்பி அப்பா சுவாமிகளால் எழுதப்பட்டு
ச. கோபால்சாமி முதலியாரால்

ஸ்ரீ சுப்பிரமணிய விலாச
அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்
பட்டது.

-:0:-

Copy Right Registered.

1917

MADRAS.

ஸ்ரீ:

# ஸுஞாநி.

தென்னாடுகளில் சிறப்புற்றோங்கி மாடமாளிகைகள் கோபுரவிமான ப்ராகாரங்கள் நல்ல சோலைகள் சூழ்ந்ததாய் ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணன் தன் பிராட்டிமார்களோடு லீலார்த்தமாக திவ்ய ரத்ன கசித விமானத்திலேறி ககனமார்க்கமாய் வரும்போது நூற்றெட்டு திவ்யக்ஷேத்திரங்களில் கொழுந்துவிட்டோங்கிய அரங்கமாநகரைக்காட்டில் கொண்டல்மீதணுகும் சோலைகள் சூழ்ந்து ப்ரகாரத்தோடு விளங்காநின்ற திருமெய்யம் என்கிற நகரத்தைப் பார்த்து பிராட்டிமார்கள் மணாளனை நோக்கி "ஸ்வாமீ! இந்நகரத்தின் சோலைகளில் தங்கி விடாய் தீர்ந்துபோவோம்" என்று நிர்ப்பந்திக்க, அப்படியே அங்கு வந்திறங்கி உலாவின இடமாயும், நல்லார் பலர்வாழ் நகரமாயும், வித்வான்கள் திரண்டிருக்குமிடமாயும், ஐஸ்வர்யத்தில் மிக்க அதிகப்பட்டதாயும் இராநின்ற இந்நகரத்தின்கண் வேளாளவம்ஸோத்பவரான ஸுமுகன் என்கிற ஓர் ஸாது வாஸம் செய்துகொண்டிருந்தார். இவருடைய தேவியாராகிய செல்வநாயகி பதிவ்ரதா தர்மத்தோடு கூடி தன் பர்த்தாவையே தெய்வமென்று பாவித்து அவர் விஷயத்தில் அத்யந்த பக்தி உடையவளாய் அநுதினமும் அவரிஷ்டத்துக்கு அணுவளவேனும் தவராமல் விஸ்ரூஷைகள் செய்துவந்தாள். இவ்

விதமாக வாழ்ந்துவருங்காலத்தில் செழுவநாயகி கர்ப்பவதியாய் ஒன்பதுமாதங்கள் சென்ற பத்தாம் மாதம் கலியுகம பிறந்த மூவ்வாயிரத்து நாநூற்றைம்பதாவது வருஷமாகிய ஆநந்தஹூ "மாஸாநும் மார்க்கவஸீர் ஷோஹம்" "మాసానాం మార్గశీర్షోహం" என்று சொல்லுகிறபடியே மாஸங்களிலெல்லாம் வைத்துக்கொண்டு நான் மார்கழி (மாஸமாகி) றேன் என்ற ஸ்ரீமந் நாராயணனே உகந்த மாஸமான மார்கழிமீ க்ருஷ்ண பக்ஷம் த்வாதஸி ஶ்ரவண நக்ஷத்திரம் சுக்ரவாரம் கூடிய சுபதினத்தில் செல்வநாயகி ஓர் ஸுபுத்ரனைப் பெற்றாள்.

இப்பிள்ளைக்கு "பத்துநாளுங்கடந்த இரண்டாம் நாள் எத்திசையும் ஜயமரம் கோடித்து" விப்ரஶ்ரேஷ்டர்களான ஆசார்யர்களையும் சோதிடர்களையும் மற்றுமுள்ள பந்துஜனங்களெல்லாரையும் வரவழைத்து பிள்ளையை உத்தானம் செய்து உகந்து நாமகர்ணதிக்ரியைகளை குறைவற நடத்தி ஜாதகம் முடித்து நீலமேகன் என்று பேரிட்டு மாணிக்கங் கட்டி வைரம் இடைகட்டின நல்லதோர் தொட்டிலில் ஏற்றி தாய் தந்தையர்கள் உகந்தார்கள்.

அநந்தரம் அப்பிள்ளைக்கு தத்தத் காலோசித தர்மங்களை தவராமல்நடத்தி பிள்ளையை நாழிகை ஒருமேனி நாளொருமேனியாக வளர்த்துவந்தனர். நீலமேகனுக்கு ஐந்துவயதான (வாறே) தங்கள் குலகுருவாகிய பட்டர்பிரான்என்கிற பௌரோஹிதரை வரவழைத்து வித்யாப்யாஸம் செய்வித்தனர். பிள்ளையும் அது துடங்கி வாசித்துவருகையில் இவனுக்கு

படிப்பு ஏற ஏற சாதுர்ய சமத்காரங்கள் அதிகரித்துக்கொண்டே வந்தன. அந்நகரத்தில் இவன் செய்யும் துடுக்குகள் இன்னவையென்று சொல்லமுடியாது. ஒரு நாள் இவன் அந்நகரத்தின்கண் சோலைகளில் திரிந்துகொண்டிருக்கையில் ஓர் தபஸி இவனைப் பார்த்து "அப்பா! நீ இங்கேவா. நீ உன் இளமையை வீணாய் கழித்துத்திரிகிறாய் "இளமையிற்கல்" என்ற ஔவையார் வார்த்தையை நீ அறியாயோ. ஆகிலும் நான் உன்னைக் குளிரநோக்கி கடாக்ஷிக்கிறேன், என் அருகேவா என்று அழைத்தார்."

அப்பிள்ளையும் தன் பூர்வாக்ருத ஸுக்ருத பலத்தாலே அவர் அருகேபோய் ஸாஷ்டாங்கமாக தண்டன் ஸமர்ப்பித்து நின்றான். தபஸியும் இப்பிள்ளையின் தைர்ய ஸ்தைர்ய பராக்கிரமங்களுக்கு ஆச்சர்யப்பட்டு அவனை வாரி அணைத்து உச்சிமோந்து மடிமேல் உட்காரவைத்துக்கொண்டு சில ஞானோதய அர்த்த விஶேஷங்களை அவனுக்குச்சொல்லத் தொடங்கினார்.

"பிள்ளாய்! கேள். நீயோ சிறுவன். பால்யஸௌந்தர்யங்களோடு கூடியிருக்கின்றாய். உன்செய்கைகளைப்பார்த்தால் அவை அறிவில்லாததன்மையாய் இருக்கின்றன. நான் உனக்கருமையான அர்த்த விஶேஷங்களைச் சொல்லுகிறேன் கேள். "வேதநூற் ப்ராயம் நூறு" என்கிறபடி மனிதனுக்கு விதித்தவயது நூறு வருஷங்கள். இவற்றில் பாதி நித்திரையில் வீணாய் கழிந்துபோம். நின்றதில் பிணி, பசி, மூப்பு, துன்பம் என்ற அநந்த விதமான கர்மங்களோடு

கூடிய துக்கங்கள் உண்டாவது நிச்சயம். காலமோ அல்பம். அதில் விக்னங்களோ அநந்தம். "மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்" என்கிறபடியே மனிதர்கள் நிலையில்லாதவர்கள். இப்பிறப்பிலேயே மறுபிறவியில்லாதவகை தேடிக்கொள்வது நலம். நாம் இதுவரையில் கணக்கற்ற ஜன்மங்களில் புகுந்திருக்கிறோம். "தத்ராபி ஶதகோடிஷு ஜங்கமஸ்தாவரத்வம், தத்ராபி ஶதகோடிஷு க்ரிமிகீடகத்வம், தத்ராபி ஶதகோடிஷு மாநுஷத்வம், தத்ராபி ஶதகோடிஷு ப்ராஹ்மணத்வம், தத்ராபி ஶதகோடிஷு வைஷ்ணவத்வம், தத்ராபி ஶதகோடிஷு மத்பரத்வம்." తత్రాపి శతకోటిషు జంగమస్థావరత్వం, తత్రాపి శతకోటిషు క్రిమికీటకత్వం, తత్రాపి శతకోటిషు మానుషత్వం, తత్రాపి శతకోటిషు బ్రాహ్మణత్వం, తత్రాపి శతకోటిషు వైష్ణవత్వం, తత్రాపి శతకోటిషు మత్పరత్వం" என்கிறபடியே ஒவ்வொரு வகையிலும் நூறுகோடி ஜன்மங்கள் எடுக்கவேண்டுமென்றும், அப்படிஎடுத்தும் ஸர்வேஶ்வரனை அடையும்ஜன்மம் அதிதுர்லபமென்றும், இஜ் ஜன்மத்திலேயே மறுபிறவி இல்லாதிருக்கும் விதம் தேடவேண்டுமென்றும். ஆத்ம குணங்களில் ப்ரதானம் சாந்தமும் தமமென்றும், இக்குணங்கள் கைபுகுந்தால் ஆசார்யன் கைபுகுவன் என்றும், ஆசார்யன் கைபுகுந்தால் மந்த்ரோபதேஶம் கைபுகுமென்றும், மந்த்ரோபதேஶம் கைபுகுந்தால் ஈஸ்வரன் கைபுகுவன் என்றும், ஈஶ்வரன் கைபுகுந்தால் மறுபிறவியில்லாத அந்நாடு கைபுகுமென்றும் வேதம் ஓதுகிறது."

“அடா பிள்ளாய்! நான் சொல்வது கவனமாய் கேள். நீ உன் வாழ்நாள் செவ்வையாய் கழிக்கவும் ஈஸ்வர பக்தி உனக்கு நன்றாய் உண்டாகவும் என்னையே ஆசார்யனாகக்கொள். நான் உன்னைத்திருத்தி என்னைப்போல் ஞானியாக்க வந்தேன். பிள்ளாய்! ஓர் கதை கேள்”

“முற்காலத்தில் கங்காநதியின் கரையில் பாடலீபுரமென்ற நகரின்கண் சோமசன்மா என்ற ஓர் ஆசார்யர் இருந்தார் அவர் அவ்வூரிலுள்ள உன்னைப் போன்ற பிள்ளைகளெல்லாரையும் கூட்டிக்கொண்டு ஞானோபதேசமும் செய்துகொண்டு வந்தனர். அப்பிள்ளைகளும் குருவிஷயத்தில் “மந்த்ரத்திலும், மந்த்ரத்துக்குள்ளீடான வஸ்துவிலும், மந்த்ர ப்ரதனான ஆசார்யன் பக்கலிலும் ப்ரேமம் கனக்க உண்டானால் (கார்ய) கரமாவது” என்கிறபடியும் “ஐந்து பொருளளித்தவன் (பாலன்பிலார்) நஞ்சில் மிகக் கொடியர் நாம் சொன்னோம், நஞ்சுதா (ஊனைமுடிக்குமிவருயிரை) முடிப்பரென்றீனமிலார் சொன்னாரிவை” என்கிறபடியும் குருபக்தி அதிகரித்தவர்களாய் இருந்தார்கள். ஆனால், ஆசார்யனுடைய கடமை, தான் ஆசரித்து தன் ஸிஷ்யர்களுக்குக் காட்டுவது ஸ்வரூபம் இவரோ ஸிஷ்யர்களுக்கு போதிப்பதில் வெகுஸமர்த்தர். தான் அனுஷ்டிப்பது துர்லபம்.

இவ்விதமாக தான் தன் ஸிஷ்யர்களுக்கு விசேஷார்த்தம் சொல்லும்போது, ஓர் விஷயத்தில் ஆத்மாவின் குணங்களைப்பற்றி சொல்லிக்கொண்டு வருகையில் ஒவ்வொருவருக்தும், மற்றுமுண்டான ஒவ்வொரு வஸ்துவுக்கும், மூன்றுவிதமான குணங்கள்

உண்டு. அவையாவன:—ராஜஸ, தாமஸ, ஸாத்வீக குணங்கள். இவற்றில் ஒவ்வொன்றிலும், மற்ற இரண்டு குணங்கள் சூக்ஷ்மமாக அடங்கியிருக்கும். ஆனால் இவற்றில் ஶ்ரேஷ்ட்டமான குணம் ஸாத்வீகம். இக்குணமே நமக்கு ப்ரதானமாக இருக்கவேண்டும். இக்குணத்தோடு கூடிய பதார்த்தங்களே நாம் சாப்பிடவேண்டும். இல்லாவிட்டால் நமக்கு தாமஸம் அதிகரிக்குமென்று அப்பிள்ளைகளுக்கு அக்குரு போதித்து ஸாத்வீகத்தோடு கூடிய பதார்த்தங்கள் சிலவற்றின, கத்திரி, வாழை, அவரை; கரணை, சேப்பம் அரைக்கீரை, தூதுவேளை, சிறுக்கீரை, முளைக்கீரை இவ்விதமானதுகளையே (சாப்பிட) வேண்டுமென்றும், தாமஸ குணத்தோடு கூடிய சுரைக்காய், முருங்கைக்காய், முள்ளங்கி, காசினி, கோசு, வெள்ளைக்கீரை முதலானதுகளை சாப்பிடப்படாது என்றும், இப்பதார்த்தங்கள் எல்லாம் கோபத்தை உண்டாக்கி, ஆத்ம நாசனம் செய்யுமென்றும், ஆத்மநாசனத்தாலே அனர்த்தப்படவேண்டுமென்றும், அனர்த்தத்தாலே ஈடேறவிறகில்லை என்றும், ஈடேறாவிட்டால் ஜன்மாந்தரத்துக்கு ஹேதுவாகுமென்றும் இவ்விதமான போதனைகளை, தன் ஶிஷ்யர்களுக்கு போதித்துக்கொண்டு வந்தார். இக் குருவுக்கோ சுரைக்காய் முதலான தாமஸ பதார்த்தங்களின்மீது அதிக ப்ரீதி. அப்பதார்த்தங்களைச் சமைத்துவைக்காவிட்டால் தன்தேவியாரை கோபிப்பது வழக்கம். அவர் போஜனம்செய்வதும் கஷ்டம். தன் தேவியாரோ, அன்றைக்கு இப்பதார்த்தங்கள் கூடாவென்று போதித்துவந்த ஶிஷ்

யங்களெல்லாம் அவள் கேட்டிருந்தமையால், மறு நாள் அவள் "நம் பர்த்தா தாமஸ பதார்த்தங்கள் கூடாதென்று போதித்தார் அல்லவா, ஆதலால் நாம் அவற்றை இனி சமைக்கப்படாது" என்று அன்றைக்கு அவள், தன் பர்த்தாவுக்கு அபிமதமான சுரைக்காயைச் சமைக்கவில்லை. மேலும் நம் பர்த்தாவுக்கு ஏன் தமஸ்ஸு அதிகரிக்கச் செய்யவேண்டும் அத்தால் அவர் ஏன் கஷ்டிக்கவேண்டும் என்று எண்ணி அக்காயை சமையாமல் இருந்தாள். குருவும் அன்றைக்கு தன் நித்திய க்ருத்தியங்களை எல்லாம் தீர்த்துக்கொண்டு அனுஷ்ட்டானுதி விதிகளெல்லாம் முடிந்தபிறகு ப்ரசாதப்படும்போது, தனக்கு அபிமதமான பதார்த்தம் சுரைக்காய்கறி இல்லாததினுல், "பெண்ணே! ஏன் நம் பதார்த்தம் செய்யவில்லை. அவ்வளவு கர்வமா! அஹங்காரமா! எப்படி நான் இன்று ப்ரசாதப்படுவேன். அது இல்லாவிட்டால் எனக்கு சாதம் இரங்காதென்று உனக்கு தெரிந்திருந்தும் நீ சமையாமல் நிறுத்திவிட்டாய் அல்லவா? வெகு அழகு," என்று அவளைக்கோபித்தும் இடித்தும் அன்றைக்கு ப்ரசாதப்படாமல் எழுந்துபோய் விட்டார். இவளும் தன் பர்த்தாவை நோக்கி "ஸ்வாமீ! நீங்கள் ஶிஷ்யபிள்ளைகளுக்கே அவ்விதமான பதார்த்தங்கள் சாப்பிடப்படாதென்று போதித்தீர்களே. ஆசாரியரான நீங்கள் இனிமேல் அப்பதார்த்தங்கள் சாப்பிடமாட்டீர்களென்று நான் செய்யவில்லை" என்று மிகவும் வினயத்துடன் சொன்னுள்.

"அடீ பெண்ணே! எவ்வளவு தைரியமாய் என்முன் நின்று இத்தனை நீதிவாக்கியங்கள் சொல்லத்துணிந்

தாய்? நீயா பர்த்தாவுக்கனுகுணமானவள்? இது வரையில் நாமிருவரும் எவ்வளவு அன்னியோன்ய மாயிருந்தோம். அப்படி இருப்பதல்லவா பர்த்ரு பாரியைகளுடைய ஸம்பந்தம். ஒன்பது வித ஸம்பந்தங்களிலும் இந்த ஸம்பந்தமல்லவா விஸேஷமென்று முறையிடுகிறது. என் மர்மஸர்மங்களை எல்லாம் வெளியிடத்தொடங்கினாய். இனி உன்னை நம்புவது ப்ராணஹானி, இந்த ஸ்வல்ப விஷயத்தையே வெளியிட்டு என்னை அவமானப்படுத்தின நீ, இனி என்ன செய்யமாட்டாய். போதும் நிறுத்து. நான் சொல்வதுகேள். எட்டில் எழுதியிருக்கும் சுரைக்காய் கரி கூடாதென்று சொன்னேனொழிய, வீட்டின் கூரைமேல் காய்க்கும் சுரைக்காய் கரியா வேண்டாமென்று சொன்னேன். நீ மிகவும் அறிவுள்ளவள்! இது அறியாமல், நிறுத்திவிட்டாயே! எவ்வளவு கெட்டிக்காரி நீ! இவ்வளவு அல்ப புத்தியோடு கூடியவளா நீ! இவ்வளவு காலமாக நாமிருவரும் பாலும் நீரும் கலந்தாப்போலே அன்னியோன்னியமாய் வாழ்ந்துகொண்டிருக்க, இன்றைக்கு உனக்கென்ன விபரீதம் வந்தது. எவ்வளவோ காலமாக சாப்பிட்டுக்கொண்டு வந்த இந்த பதார்த்தங்களை சமையாமல் நிறுத்தினால் அவர் மனதுக்குச் சங்கடமும், உடம்புக்கு வியாதியும் வருமென்றும் கூட யோசிக்காமல் நிறுத்திவிட்டாய் அல்லவா? நல்லது இருக்கட்டும். நீஇனி இவ்விதமாகச் செய்யாதே! ஸாஸ்திரங்கள் அனந்தம். "ஸாஸ்த்ரஞானம் பஹுக்லேஸம்" "శాస్త్రజ్ఞానం బహుక్లేశం" என்கிறபடி ஸாஸ்திரப்ரகாரம் நடக்க முடியாது, அது கஷ்டம். அங்

தப்பிள்ளைகள் நம்மண்டை படிக்கவந்தார்களென்று ஶாஸ்த்ரத்திலிருக்கும் விஶேஷ அர்த்தங்களைச் சொல்லி, அப்பதார்த்தங்கள் கூடாவென்று சொன்னேனே யொழிய நமக்கல்ல அந்த விஷயம். அப்பதார்த்தங்களை நீயும் நானும் சாப்பிடாவிட்டால் நாம் என்ன கதியாய்விடுவோம் தெரியுமா பெண்ணே! நாம் கெட்டுப்போனாலும் நம்மை அடுத்தவர்கள் உஜ்ஜீவிக்கட்டும் என்பது என்னுடைய அபிப்ராயம். இனி அப்படிச் செய்யாதே" என்று சொல்லிப்போகவிட்டார். "பிள்ளாய்! நீ இந்த கதையைச் செவ்வையாய் கேட்டாயல்லவா"?

"இந்த உலகின்கண் இப்படிப்பட்ட ஆசாரியனும் இருக்கிறானல்லவா? கேவலம் பகவதபிப்ராயத்தாலே ஆசாரியத்வம் வருவதென்று ப்ரமாணங்கள் வெளியிடுகின்றன. இவரை ஆசாரியனென்று சொல்லலாமா? மேலும் அப்படிப்பட்ட ஆசாரியனிடத்தில் சேர்ந்து அர்த்தவிஶேஷங்களைக் கற்றால், ஶிஷ்யனது ஆத்மா நஶிக்குமல்லவா? பிள்ளாய்! நீ உன் மனதில் செவ்வையாய் நினைத்துப்பார்? என்னை நீ அவ்விதமாக நினைக்காதேகொள். அக்காலத்திலே ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி அர்ஜுனனைப் பார்த்து "மாம் ஏகம்" என்று மார்பைத் தொட்டுக்காட்டி நான் தான் பரப்ரஹ்மமென்று, கீதையிலே, எவ்விதமாகச்சொன்னானோ; அவ்விதமாகவே உனக்கு நான் இப்பொழுது சொல்லுகிறேன். நானும் அப்படிப்பட்டவன்தான். உன் அத்ருஷ்டத்தாலே, கிடைத்தேன். நீ பயப்படாதே உனக்கு நான் இன்றைக்கு மந்த்ரோபதேஶம் செய்கிறேன். இந்த மந்த்ரத்தலோ

தான் ருஷிகளும் மற்றுமுள்ள பக்தர்களெல்லாம் உஜ்ஜீவித்தார்கள். மந்த்ரங்கள் அனேகம் உண்டு. ஆனால் இதுவோ மந்த்ர ரத்னம். இதையே ஸர்வேஶ்வரன் கூட ஆசைப்பட்டு லபிக்கப்பெற்றான்.

"ஓம், இத்யேகாக்ஷரி நம இதித்வே அக்ஷரே நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி, இத்யஷ்டாக்ஷரம்" "ఓమ్ ఇత్యేకాక్షరి నమ ఇతిద్వే అక్షరే । నారాయణాయేతి పంచాక్షరాణి, ఇత్యష్టాక్షరం" என்கிறபடி "மந்த்ராணும் பரமோமந்த்ரம், குஹ்யாணும் குஹ்யமுத்தமம், பவித்ரஞ்ச பவித்ராணும், மூலமந்த்ரஸ்ஸநாதநம்." మంత్రాణాం పరమోమంత్రం, గుహ్యానాంగుహ్యముత్తమం । పవిత్రంచపవిత్రాణాం, మూలమంత్రస్సనాతనం" என்கிறபடியும், இது தவிர இருக்கும் இதர மந்த்ரங்கள், இம்மஹா மந்த்ரத்துக்கீடல்ல, இந்த மந்த்ரத்தில் வ்யாபக சக்தி இருப்பதால், விஷ்ணு-வாசுதேவ மந்த்ரங்கள் கூட இதற்கீடன்று. இதை ருஷிகளும், ஆழ்வார்களும், ஆசாரியர்களும் விரும்பி, இதையே தங்கள் ஶிஷ்யவர்க்கங்களுக்கு உபதேஶித்துக்கொண்டிருந்தார்கள். அம்மஹானுபாவர்களும் இதையே ஸதா ஜபித்துக்கொண்டிருந்தார்கள். இம்மந்திரத்தின் மஹிமை வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும் பறக்க ஓதுகிறது. இப்படிப்பட்ட பரம குஹ்யமான மந்த்ரத்தையே உனக்கு உபதேஶிக்கப்போகிறேன். க்ஷத்ரபந்து என்ற அரசன், இம்மந்திரத்தின் ப்ரதமபதமான ஓம். என்றதில் அடங்கிய மூன்றெழுத்தால் பராங்கதி கண்டுகொண்டானென்று புராணங்கள் சொல்லுகிறது.

பிள்ளாய்! கேள் கலியுகம் பிறந்த நானூறு வருஷங்களுக்குப் பின் தென்னடுகளில் புகழ்பெற்றோங்கிய திருவாலி என்கிற நகரத்தின்கண் ஆலிநாடன் என்கிறவர் அரசாண்டு வந்தனர். அவர் மிகக் கொடியவாரயும், பரதாரர்பஹாரராயு மிருந்தார். இவர் விஷய சாபல்யத்தில் அதிசயித்தவராய் அவ்வூரிலுள்ள பெண்களையெல்லாம் இவ்விதமான கெடுதிகளைச் செய்துகொண்டிருந்த இவர் விஷயத்தில் பரமதயாளுவாகிய ஸர்வேஸ்வரன் கிருபைகூர்ந்து, இவர் பக்கத்தில் குடிகொண்டிருக்கும் விஷய ப்ராவண்ணியத்தை நீக்கும்பொருட்டும், இவரை புனிதனுக்கும்பொருட்டும் கடாக்ஷித்தார். இவரை ஸாஸ்திரங்களைக்கொண்டு திருத்துவது கஷ்ட்டமென்றெண்ணி, ஜாயமான கடாக்ஷம் செய்தார். எப்படியெனில்:—அவ்வூரிலுள்ள நல்லதோர் தாமரைப்பொய்கையில் குமுதமலர் கொய்வதற்கு சில தேவஸ்திரீகள், விமானத்திலேறி அப்பொய்கைக்குவந்து ஜலக்கிரீடைகள்செய்துகொண்டிருக்கையில்ஒரு ஸ்திரீ மாத்திரம் ஏதோ அஸந்தர்ப்பத்தால் அங்கு தங்கினள். மற்றவர்கள் விமானத்திலேறி ஸ்வலோகம் சென்றூர்கள். இப்பெண்பிள்ளை, விசனக்ராந்தியாய் ஒன்றும் தோன்றமல் அங்குநின்றனள். அவ்வூர் வைத்தியர் ஒருவர் அம்மார்க்கமாகப் போய்க் கொண்டிருக்கையில் இப் பெண்பிள்ளையைப் பார்த்து, அருகேபோய் குழந்தாய்! நீயார்? நீயோ சௌந்தர்யா திஸயத்தோடு ப்ரகாசித்துக்கொண்டிருக்கிறய். இங்கு தனியே நிற்க காரணமென்னவென்று கேட்கக, அப்பெண்ணும், "நான் தேவ

லோக தாஸி-என்னோடு வந்தவர்கள் என்னை விட்டுப் போனார்கள். நானோ இந்த உலகத்தின் ஸ்பரிஸத் தால் மானுஷ ஸரீரமடைந்து தனியே இங்கு நின் றேன். எனக்கு கதி எவரும் இல்லை'' என்று அழத் தொடங்கினாள். அவருக்கும் பிள்ளைகளில்லாமை யால் தயாபரராய் அக்குழந்தையை வாரி எடுத்து முத்தமிட்டு முதுகில் வைத்துக்கொண்டு தன் வீட் டுக்குப்போய், தன் தேவியாரிடத்தில் கொடுக்க அவளும் வந்தியை யாகையால், மிகவும் ஸந்தோ ஷத்துடன் வளர்த்துக்கொண்டுவந்தாள். இவள் குமுத புஷ்பம் கொய்வதற்கு வந்த காரணத்தைக் கொண்டு, இவளுக்கு குமுதவல்லி என்று திருநாம மிட்டு மிகவும் அருமையாக வளர்த்துவந்தார்கள், இப்பெண்பிள்ளையும் ஸவுந்தர்யாதிஸயத்தோடும் விளங்காநின்றனள். அவ்வூர் அரசனாகிய ஆலிநா டன், இப்பெண்பிள்ளை அந்த வைத்தியரகத்திலிருப் பது தெரிந்துகொண்டு அவர் வீட்டுக்குச்சென்று, வைத்தியரைப்பார்த்து, ''நீ உன் பெண்பிள்ளையை எனக்கு விவாஹம் செய்துகொடு. நான் உனக்கு விஸேஷ த்ரவ்வியம் கொடுக்கிறேன் என்று'' கேட் டார்.

அவரும் அரசனைப்பார்த்து ''ப்ரபூ! தங்களுக்கு என் குழந்தையைக் கொடுக்க ஸந்தேகமென்ன! தங்களைக்காட்டிலும் மேலானவர்களை நான் எங்கே தேடி கொண்டுவரப்போகிறேன் ஆனால் ஒரு விண் ணப்பம். என் குழந்தையைக் கேட்டு அவள் ஸம்ம தத்தை அறிந்து உனக்குச்சொல்லுகிறேன்'' என்று சொன்னார். அந்த குழந்தையும் ''நான் பஞ்ச சம்ஸ்

காரங்கள் இல்லாதவரை விவாகம் செய்துகொள்ள மாட்டேன்'' என்று சொன்னாள். இந்த விஷயத்தை ஆலி நாடன் கேட்டவுடனே "நான் அப்படியே ஒரு ஆசார்யனை அடைந்து ஸமாஸ்ரயணம் செய்து கொண்டு வருகிறேன்'' என்று தக்ஷணமே எழுந்து போனார். பிறகு அவர் திருவுரையூருக்குச் சென்று நம்பியாரை ஆஸ்ரயித்து "அக்னிதப்தேந சக்ரேண பாஹுமூலேது லாஞ்சித:'' "అగ్నితప్తేనచక్రేణ బాహుమూలేతులాంఛితః'' என்னும்படி சக்ராங்கித தாரராய் விரைந்தோடி வந்து வைத்தியர் க்ருஹத்தை ப்ரவேஸித்து அவரைநோக்கி "உன் பெண்பிள்ளை விரும்பிய ப்ரகாரம் லாஞ்சனதிகளை தரித்து வந்தேன், இனி தடை என்ன'' என்று கேட்டார். அந்த பெண்பிள்ளையும் இதுமாத்ரமல்ல. எனக்கொரு ப்ரதிக்ஞை உண்டு அதாவது தினந்தோறும் ஒருவருஷ பர்யந்தம் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரஸாதமிட்டு அவர்கள் ஸ்ரீபாத தீர்த்தத்தை ஸ்வீகரித்தாலொழிய நான் உனக்கு பாரியாளாக மாட்டேன் என்று சொன்னாள். இதற்கு ஆலிநாடன் ஸம்மதித்தபடியால் விவாஹ மஹோத்ஸவம் விஸேஷமாக நடந்தது. பிறகு ப்ரதி தினமும் தன் பொக்கிஷத்திலிருந்த த்ரவ்யத்தைக்கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரஸாதமிட்டுக்கொண்டு வந்தார், இவ்விதமாக நடந்துகொண்டு வருகையில் பொக்கிஷ த்ரவ்யமெல்லாம் செலவாய் விட்டபடியால் திகிலடைந்து அய்யோ! குமுதவல்லி வ்ரதம் வ்யர்த்தமாய் விட்டதே என்செய்வோமென்று யோசித்து பரத்ரவ்யாபஹாரம் செய்தாகிலும் அதை பூர்த்தி செய்

வோமென்றெண்ணி மார்க்கத்தில் வருபவர்களை வழிபறித்து அந்த த்ரவ்யத்தைக்கொண்டு ப்ரஸாத மிட்டுக்கொண்டு வந்தார். இவ்விதமாக நடந்தேறி வருகையில் ஒருநாள் மார்க்கத்தில் யாரும் வராமை யால் வ்யஸனமடைந்தவராய் நாளைக்கு என்னசெய் வோம், எவ்விதமாகத் தீயாராதனை நடக்குமென்று ஆலோசித்து தன் ஊருக்கு ஸமீபத்திலிருக்கும் திரு மணங்கொல்லை என்கிற ஆரண்ய ப்ரதேஶத்தில் உன்னதமான அரசமரத்தின் மீதேறி தன்னுடைய நான்கு மந்த்ரிமார்களையும் நாலுதிக்குகளிலும் காவ லிட்டு அவ்வழியாய் வருகிறவர்களை பார்க்கும்படி நேமித்தார். ஸர்வேஶ்வரனும், இவரை வஶீகரிப்ப தற்கு இது நல்ல ஸமயமென்றறிந்து ஸ்ரீமந் நாரா யணனும் பிராட்டியும் மணமகன் மணமகளுமாகிய அலங்காரத்துடன் ஸர்வாபரணங்களை பூட்டிக்கொ ண்டு அந்த அரண்ய ப்ரதேஸமார்க்கமாக வாத்ய கோஷ திவட்டி மத்தாப்புகளுடன் பெரிய ஆடம் பரத்தோடுவரும்போது ஆலிநாடன் மந்த்திரிகளைப் பார்த்து "ஜாக்ரதையாயிருங்கள். வருகிறவர்கள் வெகு ஸமர்த்தராக காண்கிறது" என்று ஆரவா ரித்து தன் ஹஸ்த்திலிருந்த பட்டாகத்தியைக் கொ ண்டு மரத்தின்மீதேறி பதிந்துகொண்டிருந்தார். அவர்கள் அருகில் வந்தவுடனே மந்த்ரிகள் நால்வ ரும் ஒன்ருய்க்கூடி வாத்யம், திவட்டி, மத்தாப்புகளை தூரமாக துரத்திக்கொண்டுபோய் தம்பதிக ளிரு வரைமாத்ரம் தனியே நிறுத்தினர்கள். ஆலிநாடன் ஆரவாரித்துக்கொண்டு மரத்திலிருந்திறங்கி அவர் கள் அருகேவந்து ஸர்வாபரணங்களையும் கழற்றி மூட்டையாகக்கட்டி கீழேவைத்து அவர்கள் கால்

விரல்களில் தரித்துக்கொண்டிருந்த மோதிரங்களை கழற்றப்போனார். அவை வராமையால் மணவாளனைப்பார்த்து நீ என்ன மந்திரவாதியா, உன்கால் விரலிலிருக்கும் மோதிரம் வராமலும் ஆபரண மூட்டையை எடுக்கமுடியாமலும் செய்தாயா, என்ன. சொல். அம்மந்த்ரத்தை சொல்லாவிட்டால் இப்பொழுதே இந்த வாளுக்கு இரையாக்கிவிடுகிறேன்" என்று தன் பட்டாகத்தியைக் காட்டி கேட்டார், ஜகத்ரக்ஷகனை ஸ்ரீமந்நாராயணன் இவரை வலிகரிப்பதற்கு இது ஸமயமென்றெண்ணி "ஓ மூடா! நான் மந்த்ரவாதியல்ல, ஆனால் எனக்கொருமந்த்ரம் தெரியும். அம்மந்த்ரத்தை வேண்டுமானால் சொல்லுகிறேன் கேள். உன் வலது செவியை தாழ்த்து" என்று வளையச்செய்து தன் திருவடிகளால் ஆலிநாடனுடைய கால் பெருவிரலை அழுத்திக்கொண்டு தன் வலது ஹஸ்தத்தை அவன் மத்தகத்தின்மீது வைத்து மந்த்ராதனமாகிய திருமந்த்ரத்தை உபதேஸித்தார். இந்த உபதேஸத்தைப்பெற்றவுடனே ஆலிநாடனுக்கு ஞானோதயமாய் அந்த மந்த்ராதிக்யத்தாலே ஸ்ரீமந்நாராயணனை ஸர்வப்ரகாரங்களால் பக்தி ப்ரவஸராய் பாடி, ஆடி, ஆநந்தாதிஸயத்தால் முமுக்ஷு ஜன்மத்தை அடைந்து முக்த ஜன்மத்துக்கு யோக்யரானார்.

"பிள்ளாய்! நான் உபதேஸிக்கப்போகிற மந்த்ரத்தின் ப்ரபாவம் அப்பேர்ப்பட்டது என்று எண்ணு, அந்த மந்த்ரமோ நல்ல குலத்தை உண்டாக்கச்செய்யும். ஐஸ்வர்யத்தைக்கொடுக்கும் ஆஸ்ரிதர்கள் அனுபவிக்கும் ஸகல துஃகங்களையும் நிவ

ர்த்திக்கும். ஸ்ரீ வைகுண்டப் ப்ராப்தமாகும்படி செய்யும். ஆதலால் அப்படிப்பட்ட மந்த்ரத்தை உனக்கு ப்ரஸாதிக்கிறேன். நீ எனக்கு ஸாஷ்டாங்கமாக தண்டன் ஸர்ப்பித்து நில்லும்'' என்று சொல்லி தன் வலதுசெவியில் "ஓம் நமோ நாராயணாய'' என்று உபதேசித்து இதின் அர்த்தத்தை சுருக்கமாய் விவரித்து சொன்னார். அதெப்படி என்றால் ஓம் என்னும் முதல் வார்த்தையாகிய ப்ரணவபதம், அகார, உகார, மகாரங்களாகிய மூன்றெழுத்துகளால் சேர்ந்திருக்கிறது. இரண்டாவது மொழியாகிய நமஸ்ஸு:-ந என்றும் மஃ என்றும் இரண்டு பதங்களாய் இருக்கிறது. மூன்றும் பதமாகும். "நாராயணபதம்:—ஐந்து திருவக்ஷரமாய் நாரஎன்றும், அயநஎன்றும், இரண்டுபதங்களுமாய் ஆயஎன்பது சதுர்த்தியாயிருக்கிறது. [illegible] ஸர்வ ரக்ஷகத்வம், ஸர்வ கல்யாணகுணாத்மகத்வம், ஸர்வஶேஷித்வம், ஸ்ரீயஃ பதித்வம் இவற்றை அகாரம் விவரிக்கும், அந்ய ஶேஷத்வ நிவ்ருத்தி, பகவதநந்யார்ஹ ஶேஷத்வம் இவற்றை உகாரம் விவரிக்கிறது. ஆத்மாவின் ஞாநாநந்தத்வம், நித்யத்வம், அணுத்வம், ஏகரூபத்வம், ஸ்வயம் ப்ரகாஶத்வம், ப்ரக்ருதேஃ பரத்வம் இவற்றை மகாரம் விவரிக்கின்றது. அதாவது:—இத் திருமந்த்ரத்தால் அகாரவாச்யனான ஸர்வேஸ்வரன், உகாரவாசியான பெரிய பிராட்டியின் புருஷகாரத்தால், மகாரவாசியான ஜீவாத்மாவை அங்கீகரிக்கிறானென்று தாத்பர்யம். ஸுஞாநீ! உன் அத்ருஷ்டவஶம் நானென்னென்று சொல்வேன். நீ இம்மந்த்ரத்தையும், மந்த்ரத்

தின்பொருளேயும் பெற்றுக்கொண்டாயல்லவா? இப்போது உனக்கு வேறே ஜன்மமென்று சொலல வேண்டும். இதற்கு முன் நீ பிறந்திருந்தும் பிறப்போடு சேர்ந்தவனல்ல. இப்போதல்லவா உன் ஜன்மம் பாவனமானது. நீ இந்த லோகத்தில் ஜீவித்திருக்கும்வரையில் அநேக அத்புதமான காரியங்களைச் செய்யப்போகின்றாய் அன்றியும் உன்னை ஆஸ்ரயிக்கப்போகும் சிஷ்யர்கள் அநேகர். நீ ஸந்தோஷமாய் உன் வீட்டுக்குப்போய் உன் தாய்தந்தையர்களுக்கு, உனக்கு கிடைத்த விஷயங்களை தெளிவாய் விவரித்துச் சொல்லி "பங்காதுத்பத்யதே கீடம், கீடபங்கனபத்யதே, லோகோத் பத்யதே ஞானி, ஞாநீலோக நபத்தியதே" "పంకాదుత్పద్యతే కీటం కీటం పంకః పద్యతే । లోకోత్పద్యతే జ్ఞాని జ్ఞానీలోకనపద్యతే" என்கிற ப்ரகாரம் பிள்ளைப்பூச்சி சேற்றில் பிறந்தாலும் அச்சேறு எப்படி அதற்கு ஒட்டாதோ அவ்வாறே ஞாநி லோகத்தில் பிறந்தாலும் லோகத்தின் தீ நடக்கை அவரை அணுகாது. நீயும் அதைப்போலவே இந்த லோகத்தையும், பந்துக்களையும் எல்லாரையும் நிவர்த்தித்து "மாதாநாஞ்ச கமலா தேவி: பிதாநாஞ்ச ஜநார்த்தனः, பாந்தவோ விஷ்ணுபக்தாநாம், ஸ்வதேஶம் புவனத்ரயம்" "మాతా నాంచకమలాదేవి పితా నాంచ జనార్ధన । బాంధవో విష్ణుభక్తా నాంస్వదేశం భువనత్రయం" என்னுமாறு உனக்கு தாய் தந்தையர்கள் ஜநார்த்தனனும் பிராட்டியுமென்றும், பந்துக்கள் பக்தர்களென்றும், ஸொந்த தேஶம் ஸ்ரீவைகுண்டமென்றும் நம்பு. இந்த அர்த்த விஶேஷங்களெல்லாம் உன் மனதில் த்ருடமாய்நம்பி

என்னை அனுதினமும் உன்ஞாபகத்தில் வைத்துக் கொண்டு ஜாக்ரதையாய் நடந்துகொள்ளும். போய் வாரும் என்று செலவுகொடுத்து அனுப்பினார்.

ஸுஞாநியும் தன் ஆசார்யனான தபஸியின் நியமனத்தைப்பெற்று தன் வீட்டுக்குவந்து தாய் தந்தையர்களைப்பார்த்து அவர்களுக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரங்கள் செய்து எழுந்துநின்று தான் வீட்டைவிட்டுப்போனது முதல் தபஸியிடத்தில் நியமனம் பெற்று வருகிறவரைக்கும் நடந்த வ்ருத்தாந்தங்களெல்லாம் தெளிவாய் அவர்களுக்கு தெரிவித்தான். ஸுஞாநியின் தாய் தந்தையர்கள் வியப்படைந்து, "குழந்தாய்? இவ்வளவுநாள் நீ எங்கு போயிருந்தாய், நாங்கள் உன்னைத் தேடித்தேடி கடைசியாக நிராசை செய்துகொண்டோம். இனிமேலாகிலும் வீட்டைவிட்டுபோகாமலிரும். உனக்கு விவாஹம் செய்துகொள்ளும் யௌவனம் வந்திருக்கிறது. நாங்கள் விவாஹ மஹோத்ஸவம் செய்து எங்கள் கண்களுக்கு வேடிக்கையாக பார்க்கவேண்டாமா" என்று வ்யஸனப்பட்டார்கள். ஸுஞாநியும் தாய் தந்தையர்களை நோக்கி, "தாய் தந்தையர்களே? நான் உங்களுக்கு சொல்லப்போவதை தயவுசெய்து கவனமாய் கேளுங்கள்:—உங்களைப்போன்ற தாய் தந்தையர்கள், நான் முன் ஜன்மங்களில் அடைந்தது எத்தனைபெயரோ இஜ் ஜன்மத்தில் நீங்களானீர்கள், இனி எடுக்கப்போகும் ஜன்மங்களில் எத்தனைபெயரோ தாய் தந்தையர்கள். ஆதலால் நாசஹேதுவாகும் இச்சரீரத்துக்கு அஹங்காரம், விஷயப்ராவண்யம் ப்ரதானகாரணம் இதற்குக் காரணம் அநேக ஜன்மங்களை எடுப்பதே ஆத

லின் ஞானிகளெல்லாம், தங்களைப் பார்க்குமிடத்து பகைவனைப் பார்ப்பதுபோலும், இதற்குக் காரண பூதர்களான ஸம்ஸாரிகளை நோக்கும்போது பாம்பை பார்ப்பதுபோலும், இவற்றை ;விடும்படியான ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பார்க்கு மிடத்து பந்துக்களைப் பார்ப்பதுபோலும் ஈஶ்வரனை நோக்குமிடத்து பிதாவைப் பார்ப்பதுபோலும்; ஆசார்யனைப் பார்க்கும்போது பசி எடுத்தவன் அன்னத்தை நோக்குவதுபோலும், ஶிஷ்யனை பார்க்கும்போது ப்ரியமான விஷயத்தை பார்க்குந்தன்மைபோலும் எண்ணி அஹங்கார, அர்த்த காமங்கள் மூன்றையும் அநுகூலமாயிருக்குமவர் விஷயத்தில் ப்ரீதியில்லாமையும் ப்ரதிகூலர் விஷயத்தில் விருப்பமும், விரும்பாதவரிடத்து விருப்பமும் உண்டாகுமென்று நினைத்து ஆத்மகுணங்கள் நம்மாலும், அந்யராலும் பிறக்கச்செய்வோம். ஆனால் நல்ல ஆசார்யனால் உண்டாகின்றன என்று நம்பி ஆசார்யனது தேகபோஷணையில் ஶிஷ்யன் கவனித்துக்கொண்டு தான் இந்த லோகத்தில் இருக்கும் வரையில் அவரை விடாமல் ஶிஷ்ருஷைகள் செய்துகொண் டிருக்கவேண்டும். ஆனால் ஆசார்யனோ ஶிஷ்யனது ஆத்மரக்ஷணம் எப்போதும் செய்துகொண்டு அப்போதைக்கப்போது ஞானத்துக்கு விருத்தமானவற்றை ஞாபகப்படுத்திக்கொண்டும் அந்யவிஷயங்களில் ப்ரவர்த்தியாமல் ஶிக்ஷித்துக்கொண்டும் ஞானோபதேயம்செய்துகொண்டு வரவேண்டும். இப்படி ஶிஷ்யாசார்யர்கள் பரஸ்பரம் நடக்கில் ஈஶ்வரன் கடாக்ஷிப்பதற்கு ஸந்தேகமிராது நீங்கள் இதுவரையில் எத்தனைபேருக்கோ குழந்தைகளாய் பிறந்திருப்பீர்கள். இனி

யும் எத்தனைபோருக்கோ குழந்தைகளாய் பிறக்கப் போகிறீர்கள். நானும் அவ்வாறே இஜ்ஜன்மத்தில் உங்களுக்கு பிள்ளையாய் பிறந்தேன். நன்றாய் போசித்துப்பாருங்கள். நீங்களெல்லாரும் எனக்கு ஔபாதிக பந்துக்கள். உண்மையான அன்னை பிதாக்கள் ஸ்ரீமந் நாராயணனும் அவனுடைய பத்தினியான லக்ஷ்மீதேவியே? தந்தையே! நான் சொல்லும் இதை தயவுபுரிந்து கவனமாய் கேளும்? முமுக்ஷுவாய் மோக்ஷத்தில் இச்சை உண்டாய் உஜ்ஜீவிக்க வேண்டுமானல் ஸர்வேஶ்வரனையே நிருபகமாய் ஆஶ்ரயித்து இருக்கவேண்டும். இந்த ஆபாஸமான பந்துக்களான தமையன்கள், புத்ரர்கள், தாய்தந்தையர்கள் முதலியோர் ரக்ஷகர்கள் ஆகவே ஆகார் அதெப்படியெனில்:—தமையன்கள் ரக்ஷகர்களாகார்கள் என்ற விஷயம் வாலிபர்களிலும் இராவணன் பக்கலிலும் பார்க்கலாம். தாய்தந்தையர்கள் யௌவனவிரோதிகளென்று அலக்ஷ்யம்செய்து கருப்பு நேரிட்டபோது ஸமயம்பார்த்து குகையில் எறிந்துவிடுவதும், விலைக்கு விற்பதும், ஆபத்துநேர்ந்தவுடனே விட்டுவிட்டு ஓடிப்போவதும் உண்மை. ஸ்திரீகளுக்கு புருஷர்கள் ரக்ஷகர்களாகார் என்னும் விஷயம் தர்மபுத்ரர்கள் பக்கலிலும், நளனிடத்திலும் காணலாம். இவை யாவையும் ஆலோசிக்குங்கால் ஒருவராகிலும் ரக்ஷிக்கும் ஸ்வபாவத்தை உடையவர்களல்லர். என் இந்த பயனற்ற தேகம். இதைவிட்டு இனி ஜன்மம் இல்லாதபதவியை அடையும் வழியைத்தேடுவது நலம். தந்தையே! என்னை நீங்கள் இனிமேல் உங்கள் புத்ரனாக எண்ணக்கூடாதுகாண். நான் உங்கள் வம்ஶத்தில் காரணார்த்த

மராய் பிறந்து ஸுஞாநியாய் ஜகத்ரக்ஷக காரணபூதனை பரப்ரஹ்ம ஸ்வரூபத்தை என் ஆசார்யரது அநுக்ரஹத்தால் ஆஶ்ரயித்தேன். அவரிடத்தில் யான் இடைவிடாத பக்தியுக்தனைய் அவனையே அன்னையாயும் பிதாவாயும் மற்றுமுள்ள பந்துக்களாயும் நினைத்து நடந்துகொண்டால் எனக்கு ஸ்ரீ வைகுண்டமென்னும் பதவி கிடைப்பதுமல்லாமல் உங்களெல்லாருக்குங்கூட என் ஸம்பந்தத்தாலும் அன்றியும் என் ஆசார்யருடைய ஸம்பந்தத்தாலும் உத்தமமான ஜன்மம் அடைவதற்கு ஸந்தேகமில்லை தாய் தந்தையர்களே? என்னை கடாக்ஷித்து என் மீது உங்களுடைய பரிபூர்ணக்ருபைவைத்து ஆரண்யத்திக்கு அனுப்பவேண்டும் என்று தாய் தந்தையர்களைக் கேட்டுக்கொண்டான்.

பிந்தி, ஸுஞானியும் தாய்தந்தையர்களுடைய நேமனத்தைப் பெற்று தன் ஊரைவிட்டுப் புறப்பட்டு தன் ஆசார்யரது ஆஞ்ஞைப்படி ஐம்பது மயில் தூரத்திலிருக்கும் திருமோகூர் என்னும் திவ்ய க்ஷேத்ரத்தைக்கண்டு அந்த க்ஷேத்ரத்துக்குள் ப்ரவேஶித்து நல்ல நிழல் வஸதியும், ஜல வஸதியுமாயும், ஏகாந்தமான ஸ்தலமாயும் அன்றியும் பக்தி நிஷ்டர்களுக்கு அநுகூலமாயும் இரமணீயமாயுமுள்ளதொரு வனத்தில் ஆஸ்ரமமொன்றை நிர்மித்துக் கொண்டு வஸிக்கத்தொடங்கினர் பிறகு, ஸுஞாநி தன் ஆசார்யரை மறவாது அவரைப்போல் ஒரு திவ்ய மங்கள விக்ரஹத்தைச்செய்வித்து அந்த ஆஶ்ரமத்தில் எழுந்தருளச்செய்து, அத்திவ்ய மங்கள விக்ரஹத்துக்கு தான் ப்ரோக்ஷணாதி விதிகளையும்

குறைவற நிறைவேற்றி ப்ரதிதினமும் தன் ஆசார்ய னுக்கு அத்யந்த பக்தியுக்தனைப் கைங்கர்யம்செய்து கொண்டிருந்தார்,

ஸுஜ்ஞானியும் 'ஆசார்யனை தன்மனதில் நன்றுய் த்யானித்துக்கொண்டே ஸகல வேதாந்த ஸாரங்க ளெல்லாவற்றையும் அவரதுக்ருபையாய் அப்யஸித் தார். இவ்விஷயம் தெரியும், இவ்விஷயம்தெரியாது என்ற ஸந்தேகமில்லாமல் கையிலுள்ள நெல்லிக் கனிபோல எல்லாவற்றிலும் ஸமர்த்தரானார் அன்றி யோகாப்யாஸமோ சொல்ல முடியாது. இவரை தர்ஶிப்பதற்காக நாற்றிசைகளிலிருக்கும் மஹாத் மாக்களெல்லாம் வந்துகொண்டிருந்தார்கள், இவ் விதமாக இவர் ஸகல ஸாதுக்க ளெல்லாருக்கும் அன்றியும் பக்திமார்களெல்லாருக்கும் ஶ்ரேஷ்டட ராய் ப்ரகாஶித்துக்கொண்டிருந்தார்.' இதுவுமல்லா மல், பகவதபசாரம், பாகவதாபசாரம், அஸஹ்யா பசாரம், அக்ருத்யகரணம், ப்ரஹிம்ஸை, ப்ரஸ்தோ த்ரம்; பரதாரங்கொள்ளல், பரத்ரவ்யங்கொள்ளல், பொய்பேசுதல் உண்ணக்கூடாதவற்றை உண்ணல் முதலியவை செய்யாமல் ஸகல ப்ரமாண நியதனைய் அவதார விசேஷமென்று நினைக்கும்படியாக நட ந்துகொண்டிருந்தார். இவ்விதமாக தன் ஆஶ்ரமத் தில் வஸித்துக்கொண்டிருக்கையில், இவருடைய ஆஶ்ரமத்துக்கு வந்து ஆஶ்ரயிக்கும் ஶிஷ்யர்கள் அநேகர் தன் ஆசார்யரைவிட இவருடைய மகிமை மிகவும் விஶேஷமாய் ப்ரகாஶித்துக்கொண்டு வந் தது. இவரோ தன்னை ஆஶ்ரயித்திருக்கும் ஶிஷ்யர் களுக்கு முதலில் அகங்கார மமகாரங்களை நிவர்த்தி

செய்வது வழக்கம். அன்றியும், அவர்களுக்கு பக்தர்களிடத்தில் அபசாரப்படக்கூடாதென்றும், அபசாரப்பட்டால் நெருப்புபட்ட பஞ்சியைப்போல் நசிக்கவேண்டுமென்றும் தன் ஶிஷ்யர்களுக்கு அப்போதைக்கப்போது போதித்துக்கொண்டு வந்தார். இப்படியிருக்கையில் தன் ஶிஷ்யர்களில் ஸகலத்தையும் க்ரஹித்த அத்ரிஶேகரன் என்பவன், தனக்கு ஸமஸ்தமும் ஆசார்யனது க்ருபாகடாக்ஷத்தால் பெற்றிருந்தும் ஒரு தீக்குணம் மாத்ரம் அவனிடத்திலிருந்தது. அதென்னெனில் பக்தர்களைப்பார்த்து ஜன்ம நிரூபணம் செய்தல், அவர்கள் மீது குறைகளைச்சொல்லி குற்றங்கள் கண்டுபிடித்தல் இவை இவனிடத்தில் முக்கியமாய் இருந்தன, இவனோடு கூட ஆஶ்ரயித்த மற்ற ஶிஷ்யர்கள் இவனுடைய தோஷங்களை அப்போதைக் கப்போது தமது ஆசார்யருக்கு விண்ணப்பிப்பார்கள். ஆசார்யர் எவ்வளவோ புத்திசொல்லியும் அதை விடவில்லை. ஆசார்யரோ ஸமயம் பார்த்துக்கொண்டிருந்தார். ஒருநாள் பௌர்ணமியன்று ஶிஷ்யர்களெல்லாம் ஸங்கல்பாதி கர்மக்ரியைகளை ஆசரிப்பதற்காக நதீதீரத்துக்கு போனார்கள். அத்ரிஶேகரனும் அப்படியே கர்மக்ரியைகளை ஆசரிப்பதற்கு எள் தர்ப்பை இவற்றை கையில் எடுத்துக்கொண்டு ஆற்றங்கரைக்கு போகும்போது, ஆசார்யன் இச்சமயம் பார்த்துக்கொண்டிருந்து சிஷ்யனுக்கு பிந்தியே பின்தொடர்ந்து போய், தன் ஶிஷ்யன் ஆற்றங்கரையில் ஸங்கல்பாதி க்ரியைகளை ஆசரிப்பதற்கு ஆரம்பிக்கும் ஸமயத்தில் ஆசார்யரான ஸுஜ்ஞானி அவன் எதிரில்

னின்று "ஶிஷ்யா! நீ எனக்கு ஒன்று தானம்செய்ய வேண்டும். இன்று பௌர்ணமீ புண்ணியகாலம் இக்காலத்தில் எல்லோரும் தானம் செய்வது உண்மை. ஆதலின் நீயும் எனக்கு தானம் செய்யவேண்டும்" என்று கேட்டார். ஶிஷ்யன் அதற்கு "ஸ்வாமீ! இதென்ன அதிசயம்" "ஶரீரம் வஸுவிஞானம் வாஸஃ கர்மகுணனுஸூன், குர்வர்த்தம் தார்யஸ்ஞ ஸ்ஸஶிஷ்யோ நேதர்ஸ்ம்ருதஃ" శరీరంవసువిజ్ఞానం వాసఃకర్మగుణానసూన్, గుర్వర్థంధారయేద్యస్తు సశిష్యో నేతరస్మృతః" என்னும்படி தேவரை ஆஸ்ரயித்த போதே ஸகலத்தையும் உங்களுக்கு பரண்யாஸம் செய்திருக்கும்போது இப்போது புதிதாய் என்னிடமிருக்கும் எதை நான் உங்களுக்கு ததம்செய்வேன் ஸ்வாமீ! இவ்வாறு சொல்கிறீரே நானென்செய்வேன் "என்று துஃகித்தான்". அத்ரிஶேகரா! நான் சொல்கிறேன்கேள். நீ எனக்கு ஸகலத்தையும் ஸமர்ப்பித்தது உண்மையே. ஆனால் உன்னிடத்தில் ஒரு கெட்டகுணமிருக்கிறது. அதையே நான் எனக்கு ஸமர்ப்பிக்கும்படி கேட்பது. ஆதலால் நீ அதை உன்மனஃபூர்வகமாய் இனிசெய்யேன் என்று தருப்பையையும் எள்ளையும் உன் கையில் வைத்துக் கொண்டு ஜலம் விட்டு எனக்கு தத்தம் செய்யும் அப்படி செய்தால் இனிமேல் நீ அந்த துர்க்குணத்தை விட்டுவிடுவாய் "என்று தன் ஶிஷ்யனை பலாத்காரப்படுத்தி அத்தீக்குணத்தை விடும்படியான தானத்தைக் கைக்கொண்டார். ஆனால் ஶிஷ்யனுக்கோ, பாகவதாபசாரத்தை அடைந்தடைந்து அப்பியாசம் ஆகவே, தன் நாக்கும் காய்ப்புற்றிருக்கிறது. அத்ரிஶேகரன் தான் தன் ஆசாரியருக்கு தன்

173473

க்குணத்தை தானம் செய்தவுடனே ஒன்றுந் தோற்றமல் அய்யோ நானென்ன செய்யப்போகிறேன். முன்பாகிலும் அபசாரத்தோடு மாத்ரம் நவித்துக் கொண்டிருந்தேன். இப்போதோ, ஆசார்யனது, கட்டளை மீறி நடக்கும் தோஷமும் எனக்கு ஸம்பவிக்குமல்லவா? என்று துஃகாக்ராந்தனுய் உடனே அந்நதீ தீரத்திலிருந்து தன் ஆடையை வாங்கி முக்காடிட்டுக்கொண்டு யாருடன் பேசாமல் விரைவாய் வந்து தன் வீட்டை அடைந்து ஓர் அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டு படுத்துக்கொண்டார். தன் மனைவி, நண்பர்கள் முதலியோர் யாவரும் கதவைத்தட்டி எழுந்து வரும்படி எவ்வளவோ வேண்டியும் வரவில்லை. பின்னர், இச்செய்தி தன் ஆசார்யரான ஸாஞானிக்கு விண்ணப்பிக்கையில், அவர் தன் ஶிஷ்யனுடைய துயரமிகுதியைப்பார்த்து அநுதாபமடைந்து உடனே தன் ஶிஷ்ய கூட்டத்துடன் அத்ரிஶேகரனது வீட்டுக்குச் சென்று, அவன் படுத்திருக்கும் அறையின் கதவைத் தட்டி "ஒஶேகரா! பயப்படாதேயும், எழுந்துவா!" என்று தந்தை குழந்தையை கூப்பிடும்விதமெப்படியோ அப்படி அழைத்தார். அழைக்கவே, ஆசார்யன்மீது பாரத்தை வைத்து, கதவைத் திறந்துகொண்டு வந்து ஸாஷ்டாங்கமாக தண்டன் சமர்ப்பித்து தன் ஆசார்யன் எதிரில் நின்றான். நின்றவுடனே, ஸாஞானி அத்ரிஶேகரனைப்பார்த்து, "அப்பா! உனக்கு உண்மையாக பயம் உண்டாச்சுதா? நல்லது ஆகட்டும். இதோபார் உனக்கு இனிமேல் அவ்வாறன துர்க்குணங்கள் இல்லாமல் செய்கிறேன்.

நீ என்முன் பத்மாஸனமிட்டு உட்காரும்'' என்று சொல்லி தான் தன் இரண்டு திருவடிகளையும் தன் ஶிஷ்யனது மத்தகத்தின்மீது அலங்கரித்து, வலது செவியில் மந்த்ர ரத்னத்தை உபதேஶித்தார். இவ்வண்ணம்செய்யவே, ஶேகரனுக்கு விஶேஷ கடாக்ஷம் கிடைத்தமையால் அது முதல் தனக்கிருந்த துர்க்குணங்கள் தீப்பிடித்த பஞ்சுபோல் நீறாய் போய் விட்டன. இவ்விதமான மகிமைகளால் தன் ஆஶ்ரமத்தில் ஸுஞானி வீற்றிருந்தார். நாரதர் முதலிய இருடிகளும் மற்றுமுள்ள மஹாத்மாக்களும், தம் தம் ஸந்தேகங்களை தெளியும்பொருட்டாய் அங்கு சென்று ஸுஞானியை ஆஸ்ரயித்து அறிந்துகொண்டிருந்தார்கள். இவ்வாறு நடந்துகொண்டிருக்கையில் ஸுஞானியும் தன் ஆஸ்ரமத்துக்கு இருபது மயில்கள் தூரத்தில் அவதரித்திருக்கும் ஸ்ரீ மந் நாராயணனை நாடோறும் நடுராத்ரியில் அவ்விடத்துக்கு எழுந்தருளி தன் கையில் வீணை யெடுத்துக் கொண்டு அப்பெருமாளுக்கு எதிரில் நின்று மெய் மறந்து பக்தி பரவஶராய் பாடுவது வழக்கம். இதின்படி தினமும் அவர் செய்துகொண்டு வரும் போது, இவர் ஶரீரபரவஶராய் பாடிக்கொண்டிருக்கும்போது ஸ்ரீமந் நாராயணன் இவரை ஸந்தோஷிப்பித்து உபசாரங்கள் செய்வது வழக்கம். இப்படி நடந்துகொண்டு வருங்கால், ஒருநாள் ஸுஞானி வழக்கப்படி தன்கையில் வீணை எடுத்துக் கொண்டு எம்பெருமானைபாடுவதற்கு புறப்பட்டார். பாதை நடுவிலுள்ள மைதானத்தில் ஓர் அழகிய அரசமரமிருந்தது. அம்மரத்துக்கு அருகில் போய்

க்கொண்டிருக்கும்போது ஒரு பிரம்ம ரக்ஷஸு தன் எதிரில் நின்று அதட்டி ஸுஞானியை தடுத்து "ஓ நராதமனே! இம்மார்க்கத்தில் நான் இருக்கிறேனென்றுநினையாமல் நிர்ப்பயமாய் வந்துகொண்டிருக்கிறாயல்லவா. நல்லதிருக்கட்டும். இப்போது உன்னை நான் என் கடைப்பல்லுக்கு இரையாக்கிக்கொள்வேன் பார்" என்று ஆரவாரத்துடன் நின்றது. ஸுஞானியும் சற்றும் பயப்படாமல் அந்த இராக்ஷஸியை நோக்கி "ஓ ராக்ஷஸீ! நல்லது ஆகட்டும். நானொன்று சொல்லுகிறேன் கேள். நான் இவ்விடத்துக்கு இருபது மயில்கள் தூரத்தில் அவதரித்திருக்கும் ஸ்ரீமந் நாராயணனை வீணாகானத்தால், பாடி அனுபவிப்பது வழக்கம். இதோ என்கையில் பார்த்தாயா வீணை. இவ்வீணையால் நான் பெருமாளைப் பாடி ஆநந்திப்பது. ஆகையால் நீ என்மீது க்ருபை வைத்து அனுமதி கொடுத்தால் என் அனுபவம் தீர்ந்த தக்ஷணமே திரும்பிவந்து உனக்கு ஆகாரமாகிறேன். விடைகொடு" என்று கேட்டார். இராக்ஷஸியும் "அப்பப்பா! மனுஷ்யர் கபடர் அஸத்யவந்தர். ஆதலால், உன்னை நம்பவே நம்பேன் கைக்கு எட்டின வஸ்துவை விட்டுவிடுபவர் உளரா? நல்வார்த்தை சொன்னாய்? நான் நம்பவே நம்பேன்" என்று பெருநகை செய்தது. ஸுஞானியும் "இராக்ஷஸீ! நீ அவ்வாறு நினையேல். நானப்படிப்பட்டவனன்று, நான் பகவத் பக்தியுடையவன். என் தேகம் அநித்யம். சித்து என்னும் ஆத்மா அசித்தென்னும் சரீரத்தை நீங்கி ஈஸ்வரனான பரமாத்மாவை எப்போது அடையுமோ என்

று எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறேன். எனக்கு இப்பூமியிலிருக்கவேண்டுமென்னும் ஆசை கொஞ்சமேனுங்கிடையாது. எப்பொழுது இது நீங்குமோ என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன். இதற்கு நீ என் குலதெய்வத்தைப்போல் வந்து தோன்றினாய். என் அத்ருஷ்ட்டம் என்னென்று சொல்வேன். நீ என்னைத்தின் பேன் என்று தீர்மானித்தது எனக்கு எவ்வளவோ ஸந்தோஷம். பழைய வஸ்திரம் போனால் புதுவஸ்திரம் வருவது உண்மையே யல்லவா? "பிறத்தலே இறத்தலுக்காக" என்னும் நீதிவாக்கியப்ரகாரம் எப்போது பிறந்தோமோ அப்போதே இறப்பது உண்மை, இவ்விடத்திலிருந்து அளவற்ற துன்பங்களடைந்து கஷ்ட்டப்படுவதைப் பார்க்கிலும் நீங்கிப்போதல் ஶ்ரேஷ்ட்டம். இராக்ஷஸீ! என்மீது உனக்கு அவநம்பிக்கைவேண்டாம், என்னை விட்டுவிட்டு என் புண்ணிய காரியத்தைச் செய்வதற்கு நியமியும். நான் திரும்பவந்து உனக்கு ஆகாரமாகிறேன்" என்று பலவிதங்களாலும் இராக்ஷஸியைவேண்ட, இராக்ஷஸியும் க்ருபைவைத்து ஸஞானியை போகும்படி நியமித்தது. அங்கிருந்துபுறப்பட்டு ஸ்ரீமந்நாராயணனது ஸந்நிதி சேர்ந்து ஸாஷ்ட்டாங்க தண்டன் ஸமர்ப்பித்து, எழுந்து நின்று, வீணை கையிலெடுத்துக்கொண்டு ஆயிர நாமங்களால் பலவிதங்களாய் பாடிக்கொண்டிருந்தார். தன் தேகம் தனக்குத் தெரியாமல் மனம் அவன்மீது லயித்தது. ஸ்ரீமந்நாராயணனும் இவரது திவ்ய கானத்துக்கு மெச்சி இவரை சேரவாங்கி உட்கார நியமித்து "ஸஞானீ! உன்கானத்

அக்கு நான் மெச்சினேன். தும்புரு, நாரதர்கள் கூட இவ்விதமாக பாடி என்னை உகப்பித்ததில்லை. நீ என்னிடத்தில் அசைவற்ற பக்தி நிறுத்தினவன் எனக்கு வெகு ஆநந்தமுண்டாச்சுது. நேரமாயிற்று நீ எழுந்துபோம். உனக்கொன்றும் குறைவில்லை. உன்னைத்தடுத்த பிரம்மராக்ஷஸி உன்னை பிரார்த்தித்து தன் ஜன்மஸாபல்யத்தை பெற்றுக்கொள்ளும். ஆதிகாலத்தில் பரப்ரஹ்மமான ஸ்ரீ ராமருடைய பாத ஸ்பர்ஸத்தால் அகல்யை எவ்வாறு ஜன்ம ஸாபல்யமாயினளோ அதைப்போலவே உன் ஸ்பரஸத்தால் இராக்ஷஸி தூய்மையாவள். நீ பயப்படாமல்போம் என்று ஸுஞானிக்கு விடைகொடுத்தனுப்பினர். அவ்விடமிருந்து புறப்பட்டு ப்ரஹ்மராக்ஷஸி இருக்கும் தலத்தைக்கிட்டி, "இராக்ஷஸி! நான் உனக்குக் கூறிய பிரகாரம் வந்தேன், இனி தடையில்லாமல் உன்னிஷ்டப்படி என்னை உண்ணும்" என்று எதிரில் நின்றார். இராக்ஷஸியும் அதட்டிக்கொண்டு "நல்லது நீ இதுவரையில் என்ன செய்துகொண்டிருந்தாய்? நீ தேவனைப் பாடினமையால் உனக்கென்ன பலம். எனக்குத் தெளிவாகச் சொல்லும்'' என்று கேட்டது. "இவை எல்லாம் உனக்கேன், உன் வேலையை நீபார்'' எனவே, ப்ரஹ்மராக்ஷஸிக்கு பூர்வ ஞானம்வந்து ஸுஞானியை பலவிதங்களால் வேண்டிக்கொண்டு "நீ தேவனைப் பாடி அடைந்தபலத்தில் எனக்குக் கொஞ்சம் கொடுத்து என் ஜன்மம் பயனடையும்படி செய்யும் என் பூர்வவிருத்தாந்தத்தை சொல்லுகிறேன் கேள்? நான் முன் பிறப்பில் ப்ராஹ்மணன், சரகுலத்தில்

பிறந்த அரசன் யாகம்செய்ய, அவ்யாகத்தில் யான் அக்ரகண்ணியனுயிருந்து அந்த யாகத்தை நடப்பித்துக்கொண்டிருந்தேன். யாகம் முடிவதற்கு முன்னமே இறந்தமையால் எனக்கு இப்பிறப்பு கிடைத்தது. அது முதல் இதுவரையில் ஊரூர்திரிந்து இப்போதிங்கு வந்து சேர்ந்தேன். ஸுஞானியாகும் உன்னால் நான் பாவனமாகவேண்டுமென்று தீர்மானித்திருப்பதால்தான் நீர் எனக்குத் தோன்றினீர். இனி தடை செய்யாமல் என்னைக் கடத்தேற்றும் என்று கேட்டுக்கொண்டது. அந்த பக்தபராதீனனை ஸுஞானி தன் ஆசார்யரை மனதில் த்யானித்துக்கொண்டு ஸ்ரீமந் நாராயணனுடைய பரிபூர்ண க்ருபாகடாக்ஷத்தை எண்ணிக்கொண்டு அந்த ப்ரஹ்மராக்ஷஸியை உட்கார நியமித்து, தான் அங்கு ஸ்ரீமந்நாராயணனை வீணகானத்தோடுபாடி அதின் மூலமாய் தான் அடைந்தபலத்தில் அந்நாளிரவு ஓர் யாமபயனை அந்த இராக்ஷஸிக்குத் தத்தம் செய்து தன் ஆசார்யன் தனக்குபதேஸித்த மந்திரத்தின் பலத்தில் கொஞ்சமும் சேர்த்து தன் இரண்டு திருவடிகளையும் அதன் மத்தகத்தின்மீது வைத்தார். உடனே, தன் கோரரூபம்மாறி விப்ரரூபம் எடுத்து ஸுஞானியை ப்ரதக்ஷணம் வந்து ஸாஷ்ட்டாங்க தண்டன் ஸமர்ப்பித்து எழுந்துநின்றது. முந்தி, இந்த ப்ராஹ்மணன் பெயர் சோமதத்தன். ஸுஞானியும் இவனுடைய பிராஹ்மண ரூபத்தைப்பார்த்து வியப்படைந்து தனக்கு ஸிஷ்யனுக கைக்கொண்டு அவனுக்கு ஞானேபதேஸம் புரிந்து தனக்கு அந்தரங்கனுக செய்துகொண்டார்.

பின்பு ஸுஞானி தன் ஆஶ்ரமமடைந்து யோகாப்பியாஸத்தில் வீற்றிருந்தார். இவ்வாறு ஸகல மகிமைகளோடு ஸாக்ஷாத் ஈஶ்வரனுக்கு அதிக அந்தரங்கபக்தனைப் மூயற்சித்துக்கொண்டு வருங்கால் ஒரு நாள் நாரதருக்கு ஒரு சந்தேகம் பிறந்து அச்சங்கையை நீக்கிக்கொள்ளும்பொருட்டு ஸுஞானியிடத்துக்கு எழுந்தருளி "ஓ ஸுஞானீ! எனக்கொரு ஸந்தேகம் உளது. அதை நீ நீக்கவேண்டும். அச்சந்தேகமென்னெனில், ப்ரபத்திக்கு நியதி உண்டா? இல்லையா? என்பதுதான். அதாவது அதிகாரத்வம் இருக்கிறதா? இல்லையா? என்பது. இந்த கேள்வியை நாரதர் ஸுஞானியைக்கேட்டார். இது கேவலம்சிறுகேள்வியல்ல. இதற்குவிடை ஸுஞானி சொல்லத்தொடங்கினர். "ப்ரபத்தி என்னும் ஞாஸவித்தியைக்கு அதாவது ஶரணாகதிக்கு தேசநியதி, காலநியதி, ப்ரகாரநியதி, அதிகார நியதி, பலநியதி, இல்லை. ஆனல் விஷயநியதியே உண்டு. கர்மக்கிரியைகளுக்கு மாத்ரம் புண்யக்ஷேத்ரம், வஸந்தாதிகாலம் இருக்கிறதென்று ஶாஸ்த்ரத்தில் சொல்லியிருக்கிறது. தவிர ப்ரபத்திக்கு அப்படிப்பட்ட நேமனங்கள் ஒன்றும் இலலை. இதற்கு த்ருஷ்ட்டாந்தங்கள் அநேகங்களிருக்கின்றன. திரௌபதீதேவியை துர்யோதனுதிகளுடைய ஸபையில் துஶ்ஶாஸனன் மானபங்கம் செய்யும்போது தன்னல் கூடியவரையிலும் மானத்தை நிவர்த்திப்பித்துக்கொள்ளும்பொருட்டு மூயன்றும் தனக்குஶக்யமாகாததால் "மஹதாபத ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவான் அரிஃ" మహాదాపదసంప్రాప్తే స్మర్తవ్యో భగవాన్ హరిః

என்று பால்யத்தில் தனக்கு இருடிபோதித்தவாக்யத்தை எண்ணி ஸ்ரீமந் நாராயணனை ப்ரார்த்திக்க மிருதி வாக்யமும் தனக்கு ஞாபகத்துக்கு வந்தது. "மஹதாபத ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவான் அரிঃ, கோவிந்த புண்டரீகாக்ஷம் ரக்ஷமாம் ஶரணாகதிঃ" మహాదాపదసంప్రాప్తే స్మర్తవ్యోభగవా౯ హరిః, గోవిందపుండరీకాక్షం రక్షమాం ஶரணாகதி:, "என்று இரண்டு கைகளையும் மத்தகத்தில் வைத்து ப்ரார்த்தித்தாள். ஸர்வரக்ஷக,ஸ்வரூபனான ஸர்வேஶ்வரன் இந்த ஶரணாகதி வைலக்ஷண்யத்தைப் பார்த்து உடனே அக்ஷயமாகும்படி க்ருபை செய்தார். பாரும்! இருஷி ஶ்ரேஷ்ட்டரான நாரதரே! அவள்செய்த சரணாகதி விசேஷம் அப்படிப்பட்டதல்லவா? அச்சமயத்தில் அவள் வீட்டு விலக்கமான இரண்டாவது நாள். இப்படிப்பட்ட கெட்ட நாளில் சரணாகதி செய்தாள். அந்த இடமோ சொல்லமுடியாது. அதிக துர்மார்க்கர்களெல்லாம் சேர்ந்திருந்த இடம். இனி ஊரோ அதைப்போன்ற அஸத்யமானதே யாதலால், நாரதரே! சரணாகதிக்கு இந்த வைலக்ஷண்யங்கள் ஒன்றுமில்லை. எப்போது எச்சமயத்தில் ஒருவருக்கு அத்வேஷம், ஆபிமுக்யம் உண்டாகின்றனவோ அந்த க்ஷணமே சரணாகதி அடைவது ஶ்ரேஷ்ட்டம். ஈஶ்வரன் இதற்கு அதிகாரத்வம் பாரான். நீர் இந்தவிஷயத்தை எல்லோருக்கும் நன்றாய் போதியும். கேவலம் இது கர்ம்க்கிரியைகளைப் போன்றதன்று. கர்மக்கிரியைகளுக்கோ அநேக யோக்யதைகள் வேண்டும். அவற்றிற்கு

கால நியதி, தேச நியதி, ப்ரகாரநியதி, அதிகார நியதி வேண்டும். ஆனல் ப்ரபத்திக்கோ அப்படிப் பட்ட நியதிகள் ஒன்றுமில்லை'' என்று ஸௌஞானி நாரதருக்கு ஶரணகதி வைலக்ஷண்யத்தை விசேஷமாய் உபதேசித்தார். இவ்விதமாய் தன் ஆஶ்ரமத்தில் அநேக அத்புதங்களான விஷயங்களை நடப்பித்துக்கொண்டிருந்தார்.

ஸௌஞானி தன் ஆசார்யருடைய ஸம்பூர்ண கடாக்ஷத்தாலும், ஸர்வேஸ்வரனது க்ருபா பரிபூர்ணத்தாலும் ஸகல அர்த்தங்களை தன் ஶிஷ்யர்களுக்கு போதித்துக்கொண்டிருக்குங்கால் அர்ச்சராதி மார்க்கத்தைக்குறித்து சொல்லவேண்டுமென்று எண்ணி ஶிஷ்யர்களை நோக்கி "ஓ ஶிஷ்யர்களே! நான் உங்களுக்கு அர்ச்சராதி வழியைப்பற்றி சொல்ல ஆரம்பிக்கிறேன். நீங்கள் நன்ருய் கேட்டு உங்கள் மனதில் வைத்துக்கொண்டு நடந்துகொள்ளுங்கள். அதெப்படி யெனில்:—நிர்ஹேதுக பகவத் கடாக்ஷத்தால் அஞான ஸௌக்ருதம் உண்டாகும். அதனல் த்வேஷமில்லாமை உண்டாகும். அதனல் பகவத்பாகவதர் விஷயத்தில் ஆபிமுக்யம் உண்டாகும். ஆபிமுக்யம் உண்டானபோதே த்யாஜ்யோபாதேய ஞானத்தில் ஸந்தோஷமுண்டாகும். அதனல் ஸாத்விக ஸம்பாஷணைகள் உண்டாகும். அதனல் ஸதாசார்ய ஸமாஶ்ரயணம் உண்டாகும் இது உண்டானபோதே ப்ராப்யத்துக்கு புறம்பாயிருக்கும் தேவதாந்தரங்களில் வைராக்கியமும், பரமப்ராப்யமாயிருக்கும் ஸ்ரீய: பதியிடத்தில் அபிநிவேஶமும்

உண்டாகும். பிறகு ஸித்தமாயிருக்கும் பரமாத்மானிடத்தில் ஆஶை பிறக்கும். அதன்பிறகு ப்ராப்தியில் த்வரை பிறக்கும். த்வரை பிறந்தவுடனே "அஹம்ஸ்மராமி" மஹாம்ஸ்தூரால என்னுமாறு ஈஶ்வரனை தியானிப்பதற்கு விஷயபூதனாவான். பிந்தி, ஸூக்ஷ்ம ஶரீர பரிஷ்வங்கம் உண்டாகும். பிறகு, பரமாத்மாவினுடைய சேர்க்கை உண்டாகும். பின்னர் மார்க்க விஶேஷப்ரகாஶம் உண்டாகும் அதன் பின்னர், அர்ச்சராதிமார்க்க கவனம் உண்டாகும். பின்பு, ஆதிவாஹிக ஸத்காரம் உண்டாகும். இது உண்டானவுடனே விரஜை ஸ்நானம் உண்டாகும். ஸ்நானம் செய்தவுடனே ஸூக்ஷ்ம ஶரீர விஶ்லேஷம் உண்டாகும். பின்பு, அமானவ கரஸ்பர்ஶம் உண்டாகும். பிந்தி, பகவத் ஸங்கல்ப கல்பிதமான திவ்யதேக ப்ராப்தி உண்டாகும். பின்பு, அகாலகால்ய திவ்யதேஶ ப்ராப்தி உண்டாகும். இது உண்டானவுடனே, ஆரம்ஹ்ரத ஸ்நானம் உண்டாகும். பின்னர், திவ்யாலங்காரம், பிந்தி திவ்ய விமான ஆரோஹணம், அதன்பிறகு திவ்யகாந்தார ப்ரவேஶம், பின்பு திவ்ய அப்ஸரஸ்ஸு ஸத்காரம், அதன் பிறகு திவ்யகந்த ப்ரவேஶம், ப்ரஹ்மகந்த ப்ரவேஶம், பிறகு அப்ராக்ருத கோபுர ப்ராப்தி, பிந்தி திவ்யநகர ப்ராப்தி, பிறகு இராஜமார்க்க கமனம், அதன்பின்பு திவ்ய மண்டபப்ராப்தி, பின்னர் ஸபத்னீஸஹித ஸர்வேஶ்வர தர்ஶனம், அதன் பிறகு பர்யங்காஸன ஆரோஹணம், பின்பு ஆலிங்கனாதி அனுபவம், பிந்தி ஸ்வரூப ரூபகுண விக்ரஹாத்யனுபவம், அதன் பின்னர் அனுபவ ஜனித ப்ரீதி

ப்ரகர்ஷம், பின்பு பலவித விக்ரஹ பரிக்ரஹம், கடைசியில் ஸர்வதேஸ ஸர்வகால ஸர்வாவஸ்தை களில் கைங்கர்யம்செய்து நியதனுதல் இவ்விதமான அர்ச்சராதிமார்க்க விஶேஷங்களை தமது ஶிஷ்யர் களுக்குபோதிக்க, அத்ரிஶேகரன் எழுந்து "ஸ்வாமீ நீங்கள் இதுவரையில் சொல்லாத அர்ச்சராதி மார்க் கத்தை இன்று எங்களுக்கு போதிக்கக் காரணமென் "என்று கேட்டான். அதற்கு ஸ ஞானி சொல்லத் தொடங்கினர். "ஶேகரா! கேள். எனக்கோ இப் போது வயது எழுபத்தைந்து வருடங்கள் ஆகப் போகிறது. எங்கள் ஆசார்யருடைய நேமனப்படி எனக்கு இவ்வுலக ஸம்பந்தம் முடிந்தது. இந்த அசித்தான ஶரீரத்தை இவ்விடத்திலேயே விட்டுப் போதல் எல்லோருக்கும் உண்மையே? எனக்கும் முக்தாவஸ்தை ஆரம்பித்தது. ஸ்ரீ வைகுண்ட பத விக்கு த்வரைபடவேண்டுமென்று நூல்கள் செப்பி யிருக்கின்றன. பரமாபக்தியாரொருவருக்கு ஸம்ப விக்கின்றதோ, அப்படிப்பட்டவர்கள் இவ்வுலகில் இரார்கள் என்பது உண்மை. யான் இன்றைக்கு நாற்பதாவது நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு எமது ஆசார்யர் நேமனத்தால் ஸர்வேஶ்வரன் எனக்கு அப்பதவியை க்ருபைசெய்வர். ஆதலால், உங்களெல்லோருக்கும் சில அபூர்வமான உபதே சங்களைச் செய்யவேண்டுமென்று ஆரம்பித்தேன். ஜாக்ரதையாய் கேளுங்கள். "என ப்ராணவியோ கத்தில் நீங்கள் கிஞ்சித்தாகிலும் துயரப்படக்கூடா து. அப்படி துஃகித்தால் என்ஸம்பந்தத்தை நிவர்த் தித்துக்கொள்பவராவீர். உங்களுக்கு நான் அந்தி

மோபாய நிஷ்ட்டையாயிருக்கும் ஸித்தோபாயத்தைசொல்லுகிறேன் கேளுங்கள். "ஸர்வேஸ்வரனை உபாயமாக ஆஸ்ரயித்தல் பந்தத்துக்கும் மோக்ஷத்துக்கும் அவன் இஷ்ட்டானுஸாரமாய் செய்வன். அன்றியும் ஈஸ்வரனை ஆஸ்ரயித்தல் கையைப்பிடித்துக் கேட்பதுபோல, ஆசார்யரை ஆஸ்ரயித்தல் கேவலம் மோக்ஷத்துக்கே காரணம். அவரை ஆஸ்ரயித்தல் பாதங்களைப் பிடித்துக் கேட்டுக்கொள்வதுபோல. அதெப்படி யெனில் ஆசார்யன் இருவருக்கும் உபகாரகர். ஈஸ்வரனுக்கு சேஷவஸ்துவை உபகரித்தார். சேதனனுக்கு சேஷியை உபகரித்தார். அதனாலேயே ஈஸ்வரன் ஆசார்யபதத்துக்கு ஆசைப்பட்டார். இதற்காகவே குரு பரம்பரை கோர்வையில் இவனைக்கூட ஒருவனாக சேர்த்துக்கொண்டது. பகவல்லாபம் ஆசார்யனால், ஆசார்யலாபம் பகவானால், இதனால் தேர்ந்த விஷயமென் என்னில்:—ஆசார்ய ஸம்பந்தம் மங்கள ஸூத்ர ஸ்தானத்தைப் போன்றதாதலால் இச் சம்பந்தம் நிவர்த்தி செய்துகொண்டால் நாஸனத்துக்கு ஹேது மாங்கல்ய ஸூத்ரம் இருந்தால் ஸகல ஆபரணங்களும் தரித்துக்கொள்ளலாம். மாங்கல்யம் போய்விட்டால் ஆபரணங்கள் பூட்டிக் கொள்ள காரணமில்லை. விதவாலங்காரம் சபாலங்காரம் போன்றது. நித்ய கைங்கர்யத்துக்குப் போகவேண்டுமென்ற ஒவ்வொருவரும் ஆசார்ய ஸம்பந்தமே உத்தாரகம் என்றெண்ணி நடக்குங்கால் மோக்ஷம் ப்ரஸாதிக்க சந்தேகமில்லை. ஆகையால், நீங்களெல்லாரும் யான்கூறின இந்த

ஸாரதமமான விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு நீங்கள் அந்தநிஷ்டையை அவலம்பிப்பது மாத்ரமேயல்லாமல் உங்களை ஆஶ்ரயிக்குமவர்களுக்குங்கூட இதையே போதித்துக்கொண்டிருக்கவேண்டும். என்னிடத்தில் நீங்கள் ஆஶ்ரயித்ததற்கு உங்களை எமதாசார்யருக்கு உடைமையாய் செய்தேன். எமதாசார்ய ஸம்பந்தத்தால் உங்களுக்கொன்றும் குறைவிராது. உங்கள் விஷயத்தில் நான் புத்தி பூர்வகமாயாவது, அல்லது அபுத்தி பூர்வகமாயாவது, அபசாரப்பட்டிருப்பேன். தூஷித்திருப்பேன். ஶ்ரமைபடுத்திருப்பேன். அவை அனைத்தையும் உங்கள் மனதில் விரோதமாய் வையாமல், என்மீது க்ருபை வைத்து க்ஷமிக்கவேண்டும். இன்றைக்கு மூன்றுவது நாள் யான் ஸ்ரீவைகுண்டபதவியை அடையப் போகிறேன். நீங்கள் யாவரும் என்னை ஜாக்ரதையாய் காத்துக்கொண்டிருக்கவேண்டும். எனக்கு செய்யவேண்டிய சர்ம க்ரியைகளெல்லாம் அத்ரி ஶேகரனைக்கொண்டு செய்விக்கவேண்டும். இவ்விதமாய் ஸஞ்ஞானி தன் ஶிஷ்யர்களுக்கு சரமோபதேஶங்கள் செய்து தான் அந்திமஸ்ம்ருதிக்கு ஸித்தமானார். இவ்வண்ணமாய் திருமேனியில் நோய் ஶாத்திக்கொண்டு பத்மாஸனனாய் தன் ஆசார்யரது திவ்யமங்கள விக்ரஹத்தை தன் மனதில் வைத்துக் கொண்டு அஞ்சலி ஹஸ்தனாய் அர்ச்சராதி மார்க்க கமனனாய் வீற்றிருந்தார். ஶிஷ்யர்கள் எல்லாரும் ஸஞ்ஞானியை விடாமல் காத்துக்கொண்டிருந்தார்கள். பிறகு, தனக்கு அந்தரங்க ஶிஷ்யனாயிருக்கும் அத்ரிஶேகரன் எழுந்து தன் ஆசார்யருடைய எதி

சில் நின்று "ஸ்வாமீ! என்கதி எவ்வாறு, இவ்வளவு காலம் உங்களை விடாமல் காத்திருந்து, இப்போது என் கதி "பருத்தி மரத்தை காத்திருந்த பறவை கதி ஆயிற்று" என்று துயரப்படத் தொடங்கினர். ஸுஞானி தன் ஸிஷ்யனைப்பார்த்து "ஸேகரா! நீ என் அழுகிறாய். உனக்கொன்றும் குறைவில்லை? நான் இருப்பது போலவே இந்த ஆஸ்ரமத்தில் எல்லா நிர்வாஹகங்கள் செய்துகொண்டு ஏமதாசார் யருடைய திவ்யமங்கள விக்ரஹத்துக்கு ஸகலவித கைங்கரியங்கள் செய்துகொண்டு உன்னை ஆஸ்ரயிக் குமவர்களுக்கு ஸாஸ்த்திரதம விஷயங்கள் போதித் துக்கொண்டிரும். சில காலம் இவ்வாறு நடந்த பிறகு நீயும் நானடையப்போகும் பதவியை அடை வாயாக" என்று புத்திசொல்லி மௌனமாயிருந் தார்.

அதன்பிறகு, ஸுஞானி தன்மனதை ஒரு ஆலய மாக ஏற்பாடு செய்துகொண்டு அந்த ஆலயத்தில் தன் ஆசார்யரை தேவனாக ப்ரதிஷ்ட்டைசெய்து, அவருக்கு ஸகல வகையான புஷ்ப்பங்களால் பூஜிப் பதற்கு ஆரம்பித்தார். இவ்வண்ணமாய் ஸுஞானி தன் ஆசார்ய நிஷ்ட்டராய் மெய்மறந்து தன் மன தை ஆசார்யனிடத்தில் லயிக்கச்செய்தார். ஸிஷ்யர் களெல்லோரும் ஆசார்யரிடத்தில் ப்ரீதி அதிகரித்த வர்களான படியால் அவர் வியோகத்தால் விசன க்ராந்தராய் எதிரில் நின்றுகொண்டிருந்தார்கள்.

ஸுஞானி தன் ஆசார்யரது க்ருபாகடாக்ஷத் தால் ஆதிவாஹகர் வித்தமாய் சமீபத்தில் காத்தி

ருக்க ப்ரஹ்மகபாலம் போதிக்க அதன் வழியாய் ஆதிவாஹகர்கள் திவ்ய தேஜஸ்ஸோடு கூடி ப்ரகாஶித்துக்கொண்டிருக்கும் ஸுஞானியின் ஸூக்ஷ்ம ஶரீரத்தை வெகு ஜாக்ரதையாய் எடுத்துவைத்துக் கொண்டிருந்தார்கள். இவருக்காக ஸ்ரீவைகுண்டத்திலிருந்து வந்திருக்கும் ப்ரணவ திருத்தேரின்மீது எழுந்தருளச் செய்து, ஸாக்ஷாத் ஸ்ரீய:பதி தன் பிராட்டி ஸஹிதமாய் அதிலிருக்கும் இவரது ஸூக்ஷ்ம ஶரீரத்துக்கு ஸஹாய பூதராய் எழுந்தருளியிருந்து ப்ரஹ்மரதத்தை நடப்பித்துக்கொண்டு ஆறு ஆவரணங்கள் தாண்டி ஸூர்ய மண்டலத்தைச் சேர்ந்தபோது ஸூர்யன் எதிர்கொண்டுவந்து ப்ரணவரதத்தை தன் மண்டலத்துக்கு எழுந்தருளச் செய்து கொண்டுபோய் இந்த ஸூக்ஷ்ம ஶரீரத்துக்கும் ஸ்ரீய:பதிக்கும் சன்மானங்கள்செய்து தன் மண்டலத்துக்கு அப்புறம் விட்டுவர, இதைப்போலவே மற்ற மண்டலாதிபர்கள் யாவரும் அவரவர்களுடைய மண்டலங்களில் மர்யாதைகள் நடத்தி அனுப்பின பிந்தி ப்ரணவ ரதம் விரஜாநதி ஸமீபத்துக்குப் போய் நின்றவுடனே, ஸ்ரீய:பதி அதிலின்றிறங்கி ஆதி வாஹகர்களுக்கு ஜாக்ரதையாய் இந்த ஸுஞானி ஸூக்ஷ்ம ஶரீரத்தை பார்த்துக்கொண்டிருங்களென்று நியமித்து தான் தன் பிராட்டியுடன் ஸ்ரீ வைகுண்டத்தை அடைந்தார். பின்பு, விரஜாதீரத்தில் காத்திருக்கும் அமானவர்களும் அப்ரணவரதத்தை எதிர்கொண்டுவந்து அதில் ஆதி வாஹகர்கள் காத்துக்கொண்டு வைத்திருந்த ஸுஞானியின் ஸூக்ஷ்ம ஶரீரத்தை எடுத்து தன்

கள் தலையின்மீது எழுந்தருளச் செய்துகொண்டு விரஜையை அடைந்து அந்த அம்ருத ஜலத்தில் ஸ்நானம்செய்ய, ஸுஜ்ஞானி ஸூக்ஷ்ம ஸரீரத்தை விட்டு பஞ்சோபநிஷன்மய திவ்ய ஶரீரமொன்று நான்கு புஜங்களோடு இமைகொட்டாத தன்மையராய் நின்றார். இதற்கு முன்னரே இந்த முக்தாத்மாவரும் ஸுஜ்ஞானி எழுந்தருள்வதை எதிர்நோக்கியிருந்த நித்யர்கள், முக்தர்கள், அப்ஸர ஸ்த்ரீகள், சத்ரசாமரங்கள் பேரீம்ருதங்க வாத்யங்களுடன் விரஜைக்கு அக்கரையில் ஸித்தமாய் காத்திருந்தார்கள். அமானவர்கள் இந்த திவ்ய மங்கள விக்ரஹாகாரனுகும் ஸுஜ்ஞானியை அக்கரைக்கு எழுந்தருளுவித்துக்கொண்டுபோய், அங்கு இவருக்காக வந்திருக்கும் ப்ரணவாகார விமானத்தில் எழுந்தருள்வித்து சத்ரசாமரங்கள் பேரீம்ருதங்க வாத்யங்கள் கோஷிக்க, அப்ஸரஸுக்கள் ஆட, ஸ்ரீ வைகுண்ட: நகரத்தை எதிர்கொண்டு எழுந்தருளினார்கள். அந்நகரமார்க்க வாஸஸ்தர்கள் யாவரும் இவர்களை எதிர்கொண்டுவந்து ஆர்த்திகள் ஸமர்ப்பித்து ஸன்மானித்துக்கொண்டுவந்தார்கள். பிறகு, நித்ய வைகுண்டத்தின் இராஜவீதிகளிலிருக்கு நித்யர்கள், முக்தர்கள் இவர்களை தம் தம் க்ருஹங்களுக்கு எழுந்தருள்வித்துக் கொண்டுபோய் இவரை அர்ச்சித்து ஸ்ரீபாத தீர்த்தம் சேர்த்து உட்கொண்டு அனுப்பிக்கொண் டிருந்தார்கள். இவ்வண்ணமாக ராஜ வீதிகளெல்லாம் ப்ரதக்ஷணமாக எழுந்தருளி ப்ரணவாகாரத்தோடு இருக்கும் முதல் கோபுரத்தை தர்ஶித்து அதற்கு தண்டனிட்டு, உள்ளே

ப்ரவேசிக்க, மாடமாளிகைகள் கோபுர மண்டபங்களால் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் ப்ரஹ்மாண்டமான மாமணிமண்டபத்தையும் அதனிடையில் ஸ்ரீ, பூ, நீளாதேவிகளோடு சேவைஸாதிக்கும் ஸ்ரீ வைகுண்ட வாஸரை ஸேவித்து நின்றார்.

ஸ்ரீயః பதியும் இவரைப்பார்த்து புன்னகையோடு மௌனமாயிருக்க, பெரிய பிராட்டியாரான இலக்குமிதேவி எழுந்து தன்பர்த்தாவான ஸர்வேஶ்வரனை நோக்கி "நீ எவ்வளவு நிர்தயாபரன் எவ்வளவோ காலம் நம்மைவிட்டு நீங்கி தேசாந்தரகதனான நமது குழந்தை, மீளவும், நம் அத்ருஷ்டவசத்தால் நம்மிடத்தில் வந்திருக்க, நீங்கள் அவனை அஸ்ரத்தை செய்து அவனை சேரவாங்காமல் இருக்கிறீர்களே? இதுதானு உங்கள் ஸர்வ ரக்ஷகத்வம்" என்று அந்த தயாநிதியும் புருஷகார ஸமர்த்தையுமாய் எழுந்தருளியிருக்கும் பெரிய பிராட்டி அவரைக்கோபித்து, தான் தன்கைகளில் முக்தாத்மாவான ஸுஜ்ஞானியை எடுத்துக்கொண்டு உபலாலித்து, பர்யங்காஸனத்தின்மீது ஏற்ற, பிறகு தான் "கோவீ" என்று கேட்க ஆரம்பித்தார். பின்னர், இம் முக்தன் தான் ஸம்ஸாரியாயிருந்து அடைந்த கஷ்டங்கள் தொடங்கி ஸ்ரீயஃபதியை அனுபவிக்கும் பதவிக்கு வந்தவரைக்குமுள்ள செய்திகளெல்லாவற்றையும், தன்னை இவ்வாறுசெய்த தன் ஆசார்யருடைய ப்ரபாவத்தையும் செப்பி ஸர்வேஶ்வரனை களிப்படையச் செய்தார். பின்னர், ஸர்வேஶ்வரன் இவனிடத்து தயாபரனுய் தன் திருவடிகளால் இவ

னது உத்தமாங்கத்தை அலங்கரித்து தன் திருவடிகளில் சேர்த்துக்கொண்டு, இவனை நித்யர் முக்தர்களில் ஒருவனாகச் சேர்த்து நித்ய கைங்கர்யபரனாக சேர்த்துக்கொண்டார்.

ஸஜ்ஞானி சரித்திரம் முற்றிற்று.

ஸ்ரீ தராயநம:

K6 M47

173473